| | |
|---|---|
| ஜஸ்டிஸ் பக்ஷீர் அகமது சையது பெண்கள் கல்லூரி,<br>சென்னை 18. 044–24364152 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (ஆலோசனை உளவியல்) |
| சென்னை சமூக சேவை பள்ளி,<br>சென்னை 8. 044–28195125 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (ஆலோசனை உளவியல்)<br>தத்துவவியல் பட்டம் (உளவியல்) |
| மாநிலக் கல்லூரி,<br>சென்னை 5. 044–28544894 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்) |
| பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>கோயம்புத்தூர். 0422–4303300 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் ( செயல்முறை உளவியல்) |
| ராஜராஜன் அகாடமி,<br>சென்னை. 044–22550001 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்) |
| ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி,<br>கோயம்புத்தூர். 04259–266008 | இளநிலை பட்டம் (உளவியல்) |
| ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>சென்னை. 044–25387021 | இளநிலை பட்டம் (உளவியல்) |
| புனித தோமையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை. 044–29312256 | இளநிலை பட்டம் (உளவியல்) |
| தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம்,<br>சென்னை. 044–24306600 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டயம் (வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை) |
| மகளிர் கிருத்துவ கல்லூரி,<br>சென்னை. 044–28275926 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் ( செயல்முறை உளவியல்)<br>தத்துவவியல் பட்டம் (உளவியல்) |

## திறன்பயிற்சி திட்டங்கள் மற்றும் கல்வித்தொகை

http://mhrd.gov.in/scholorships-education-loan-0 இணையதளத்தினை காணலாம்.

### தொழில் வளர்ச்சி பாதை

ஆலோசகர் ⇨ துணை முதல்வர் ⇨ முதல்வர் ⇨
தனிப்பட்ட முறையில் ஆலோசகராக தொழில்புரிதல்

| | | |
|---|---|---|
| ஊதியம் | : | மாதத்திற்கு ரூ.16,000 – 58,000 |
| தேவையான அனுபவம் | : | தேவையில்லை |
| வேலையளிப்பவர்கள் | : | தனியார் / அரசு பள்ளிகள், தனியார் நிறுவனங்கள்/ கல்வி நிலையங்கள்/ சுய தொழில் புரிவோர். |

### தொழில் குறியீட்டு எண் (தகுதி)

| தகுதி | குறியீட்டு எண் | விளக்கம் |
|---|---|---|
| NCO-2015 | 2423.0200 | ஆலோசகர் |
| ISCO- 2008 | 2423 | தனியார் / தொழில் ஆலோசகர் |
| NIC-2008 | 85500 | கல்வி உதவி சேவைகள் |
| QP reference | ------ | |
| NSQF | ------ | |

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை
# (வேலைவாய்ப்பு பிரிவு)




# தொழில் வழிகாட்டி ஆலோசகர்
# (VOCATIONAL COUNSELLOR)



# தொழில் வழிகாட்டி ஆலோசகர் (VOCATIONAL COUNSELLOR)

எந்த ஒரு சூழ்நிலையிலும் உணர்ச்சிவயப்படாமல், பொறுமையுடனும் அறிவுக்கூர்மையுடனும் நடந்துகொள்ளும் தன்மையுடையவர்களுக்கான ஒரு தொழில் தேர்வு "தொழில் வழிகாட்டி ஆலோசகர் (VOCATIONAL COUNSELLOR)" ஆகும். பனிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு, கலை மற்றும் அறிவியலில் இளங்கலை / முதுகலை பட்டத்துடன், கல்வியியலில் இளங்கலை / முதுகலைப்பட்டமும் முடித்தவர்கள் அல்லது உளவியலில் பட்டப்படிப்பையும் பட்ட மேற்படிப்பையும் மேற்கொண்டவர்கள் தொழில்நெறி வழிகாட்டுதலில் பட்டயமோ அல்லது முதுநிலைப் பட்டயமோ பெற்ற பின் இப்பணியினைச் செய்யலாம். இத்தகைய பணியிடத்தைப் பற்றிய தகவல்களைத் தாங்கி உங்களின் கைகளில் தவழ்கிறது இச்சிற்றேடு.

## தொழில் துறை

இப்பணி கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறையின் கீழ் அமைகிறது.

## பணியின் விளக்கம்

1. கல்வி, வாழ்க்கைத் தொழில், தனியர் தொடர்பான பல்வேறு பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுதல்.
2. பள்ளி, கல்லூரிகளில் உள்ள தொழில் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு வழிகாட்டி அவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்.
3. கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, சமூகம் மற்றும் பிற தகவல்களை சேகரித்தல்
4. மாணவர்கள் / வேலைநாடுநர்கள் தொடர்பான விவரங்களைக் கூராய்தல்
5. வழிகாட்டப்பட வேண்டியவர்களின் நுண்ணறிவு, உளச்சார்பு, ஈடுபாடு மற்றும் ஆளுமை குணங்கள் ஆகியவற்றினை கணிக்கும் உளவியல் தேர்வினை நடத்துதல்.
6. தனியர் புறச்சூழ்நிலையுடன் இணக்கமாக இருப்பது தொடர்பான விவரங்களை சேகரித்து தொகுத்து ஆய்தல்.
7. வழிகாட்டுதலின் பல்வேறு பயன்களை அடையும் நோக்கில் குழு ஆலோசனை நடத்துதல்.
8. வழிகாட்டப்பட்டவரை தொடர்ந்து கண்காணித்துத் தேவையான கூடுதல் உதவிகளை வழங்கி வழிகாட்டுதலை மதிப்பீடு செய்தல்.
9. வழிகாட்டுதல் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் சுற்றாய்வு மேற்கொள்ளுதல்.

## பணிச் சூழ்நிலை

பள்ளிகள் / கல்லூரிகளுக்குச் சென்று ஆலோசனை வழங்க வேண்டியிருக்கும். நடமாடக் கூடிய உறுப்பு நலன் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் இப்பணி ஏற்றது. பள்ளி / கல்லூரி வேலை நேரத்தில் பணியாற்றிட வேண்டும்.

## கல்வித்தகுதி மற்றும் பயிற்சி

குறுமத் தகுதி: உளவியல் முதுகலை பட்டம் / வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையில் முதுநிலை பட்டயம் / வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையில் பட்டயப்படிப்பு (ஒரு வருடம் - NCERT)

## முக்கிய திறன் தேவைகள் :-

1. மாணவர்களின் மன நலன் சார்ந்த பிரச்சனைகளை புரிந்துகொள்ளக்கூடிய அறிவு.
2. தொழில்முறை, நெறிசார் வழிகாட்டுதல் தொடர்பான அறிவு.
3. இனப்பொதுப்படையான மதிப்பீடுகளை செய்யக்கூடிய திறன்.
4. மாணவர்கள் / வேலைநாடுநர்களின் உளவியல் அளவீடுகளை பயன்படுத்தி அவர்களை வழிகாட்டி விளைவுகளை அளத்தல்.
5. குழந்தை உளவியலில் ஆழ்ந்த அறிவு.
6. சம கால சூழலில் மாணவர்கள் / வேலைநாடுநர்கள் எதிர்கொள்ளும் இனப்பொதுப்படையான பிரச்சனைகள் குறித்த அறிவு.

விரும்பக்கூடிய திறன் தேவைகள்: - ஏதுமில்லை

| கல்வி நிறுவனங்கள் | வழங்கப்படும் படிப்பு |
|---|---|
| அழகப்பா தொழில்நுட்ப நிலையம்,<br>சென்னை –84. 044–42174904 | இளநிலை பட்டம் (உளவியல்) இளநிலை பட்டம் (உளவியல்) |
| அண்ணாமலை பல்கலைக்கழகம்,<br>சிதம்பரம். 04144–238248 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்)<br>தத்துவவியல் பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டயம் (வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை) |
| அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம்,<br>கோயம்புத்தூர். 0422–2440241 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்)<br>தத்துவவியல் பட்டம் (உளவியல்) |
| டாக்டர்.எம்.ஜி.ஆர். ஜானகி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>சென்னை. 044–24937382 | இளநிலை பட்டம் (உளவியல்) |
| எதிராஜ் மகளிர் கல்லூரி,<br>சென்னை 8. 044–28279189 | இளநிலை பட்டம் (உளவியல்) |
| அரசு கலைக் கல்லூரி,<br>கோயம்புத்தூர். 0422–2215212 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்) |
| இந்திராகாந்தி தொலைதூர கல்வி கல்லூரி,<br>கோயம்புத்தூர். 0422–24044668 | இளநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (உளவியல்)<br>முதுநிலை பட்டம் (ஆலோசனை உளவியல்) |